மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

64—

பேருந்து நிலையம்

***2590—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டம், வெம்பாக்கம் ஊராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செய்யாறு சட்டமன்றத் தொகுதி, வெம்பாக்கம் வட்டம், வெம்பாக்கம் ஊராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே என் குடும்பம், தமிழக மக்களே என் உறவு (மேசையைத் தட்டும் ஒலி) என்று தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தன்னலம் கருதாமல், தன்னையே அர்ப்பணித்து, உழைத்து, உழைத்து, தன் உயிரை தமிழுக்காகவும், தமிழக மக்களுக்காகவும் ஈன்ற, இன்றைக்கு தெய்வமாய் விளங்குகின்ற தெய்வத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய பொதுச் செயலாளர், கண்ணை இமை காப்பது போல எங்களையெல்லாம் காப்பாற்றுகின்ற

2017 மார்ச் 22]

தியாகத் தாய், பெருமதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், ஆர்.கே. நகர் தொகுதியினுடைய நாளைய வெற்றி வீரர் அண்ணன் டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சாமி, நீங்கள் பேசும்போது, உங்கள் கட்சி வேட்பாளர் குறித்துச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர், அவருடைய விருப்பத்தைச் சொல்கிறார். நீங்கள் பேசும்போது, உங்கள் விருப்பத்தை நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் பேசும்போது, உங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செய்யாறு தொகுதிக்குட்பட்ட வெம்பாக்கம் தாலுகா, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், விதி 110—ன்கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட தாலுகா. அந்தத் தாலுகாவின் தலைமையிடமான வெம்பாக்கத்திற்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அரசு அலுவலகங்களுக்கும், மாணவர்கள் பள்ளிகளுக்கும் வந்து செல்கின்றனர். வெம்பாக்கம், தாலுகாவின் தலைமையிடமாக உள்ளதால், வேகமாக வளர்ந்து வரும் பகுதியாக உள்ளது. அங்கு வந்து செல்பவர்களுக்கு பேருந்து நிலைய வசதி இல்லை. எனவே, தாலுகா தலைமையிடமான வெம்பாக்கத்தில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதுமான பஸ் போக்குவரத்து இல்லை என்று கூறினார்கள். அம்மா அவர்கள், வருவாய்த் துறையினுடைய சேவைகள் விரைவாக மக்களை சென்றடைகின்ற வகையில் நல்லெண்ணத்தோடு தாலுகாவை பிரித்துக் கொடுத்தார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடியாது, இல்லை, ஆகாது' என்று அகராதியிலேயே இல்லாத (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, தாலுகாவினுடைய தலைமையிடமான வெம்பாக்கத்தில்

ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தந்து, மழையிலிருந்தும், வெயிலிலிருந்தும் மக்களைக் காக்கின்ற பொறுப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உள்ளது. கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற நம் அம்மா அவர்களுடைய அரசு, எப்பொழுதும் மக்களுக்காக செயல்படுகின்ற அம்மா அவர்களுடைய அரசு உறுதியோடு, எப்பொழுதும், எதைக் கேட்டாலும் கொடுப்பார்கள் என்ற நல்லெண்ணத்தோடு, ‘செய்வார்கள்’ என்ற உறுதியோடு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டம், வெம்பாக்கம் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 3,177 ஆகும். வெம்பாக்கம் ஊராட்சி வழியாக சென்னையிலிருந்து 5 பேருந்துகள் 15 முறையும், காஞ்சிபுரத்திலிருந்து 14 பேருந்துகள் 67 முறையும், செய்யாறிலிருந்து 4 பேருந்துகள் 12 முறையும், காஞ்சிபுரம், திருவண்ணாமலையிலிருந்து ஒரு பேருந்து ஒரு முறையும் வந்து செல்கின்றன. வெம்பாக்கம் ஊராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க போதிய இட வசதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான போதிய இட வசதியை ஏற்பாடு செய்துதரும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பேருந்து நிலையம் அமைப்பது குறித்து கவனத்துடன் செயல்பட்டு, கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

முற்பகல் 10-35

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே மக்கள்தொகையைத் தவறாகக் குறிப்பிட்டார்கள். வெம்பாக்கம் தாலுகா தலைமையிடம்தான். வெம்பாக்கம் மக்கள்தொகையை மட்டும்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

2017 மார்ச் 22]

ஏறக்குறைய ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்டது வெம்பாக்கம் தாலுகா. வெம்பாக்கத்தினுடைய அனைத்துப் பகுதிகளையும், 64 ஊராட்சிகளையும் உள்ளடக்கியதுதான் வெம்பாக்கம் தாலுகா. அத்தனை மக்களும் பயன்பெறுகின்ற வகையிலேதான் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, தயவுகூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று மறுபரிசீலனை செய்து கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டம், வெம்பாக்கம் ஊராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். அந்த வெம்பாக்கம் ஊராட்சியினுடைய மக்கள் தொகையைத்தான் நான் குறிப்பிட்டேன். சுற்றியிருக்கக்கூடிய மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாலுகாவினுடைய மக்கள்தொகையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும். ஏனென்றால், அவர் பேசும்போதே முடியாது, இல்லை, ஆகாது என்பதெல்லாம் அகராதியிலேயே கிடையாது, அதையெல்லாம் முடித்துத்தரக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்று சொல்லிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) கண்டிப்பாக வருவாய்த் துறை அமைச்சரிடம் சொல்லி அங்கே வருவாய்த் துறை மூலமாக இடம் எடுக்கக்கூடிய வேலைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று கண்டிப்பாக அதைப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற அணைக்கட்டு தொகுதி,*

அணைக்கட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 40 கிராமங்களிலிருந்து வருகை தருகின்ற மக்கள், வேலூர் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், அணைக்கட்டிலே பேருந்து நிலையம் என்பது இதுவரை இல்லை. ஆகவே, தயவுகூர்ந்து இந்த அரசு அந்தப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளைப் போக்குகின்ற வகையிலே பேருந்து நிலையம் ஒன்றை அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதை அறிவதற்கு முன்பாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: தயவுசெய்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியிலே பேருந்து நிலையம் கேட்டார்கள். வேலூர் மாநகராட்சியில் உள்ள பேருந்து நிலையம் A–கிரேடு பேருந்து நிலையமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவருடைய தொகுதிக்குட்பட்ட அணைக்கட்டில் இடம் இருப்பின் நம்முடைய துறைச் செயலாளரை வைத்து, துறை அலுவலர்களை வைத்து ஆய்வு செய்து, வாய்ப்புகள் இருப்பின் கண்டிப்பாக அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் நகராட்சியில், அஸ்தினாபுரம் பேருந்து நிலையம் 30 ஆண்டு காலமாக புழக்கத்தில் உள்ளது. ஆனால், தனியார் ஒருவர் அந்த இடம் தன்னுடைய இடம் என்று உரிமை கோரி உயர் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் 2010–2011 ஆம் ஆண்டு நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டு, 3 கோடி ரூபாய்க்குமேல் செலுத்த வேண்டுமென்று நகராட்சிக்கு உயர் நீதிமன்றம் மூலமாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில், 5 சதவிகிதத் தொகை சம்பந்தப்பட்டவருக்கு முதல் தவணையாக ஏற்கெனவே நகராட்சிமூலம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகாலமாக

2017 மார்ச் 22]

உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த இடம் இன்னமும் தனியார் வசமே இருந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்த இடத்தைப் பெற்றுத் தருவீர்களேயானால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நாங்கள் நிழற் குடை அமைப்பதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அந்த இடத்தை நிரந்தரமாக மீட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையம் அமைக்கக்கூடிய இடம் தனியார் வசம் இருந்தது.* Encroachment *என்றுதானே சொன்னீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்த இடத்தில் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அப்படிப்பட்ட பிரச்சினை இருந்தால் அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்யும். அதேபோல, பேருந்து நிலையம் அமைப்பதைப் பொறுத்த அளவில், சம்பந்தப்பட்ட மாநகராட்சி அல்லது நகராட்சியில் நிதிப் பிரச்சினை இருந்தாலும்கூட வங்கி மூலமாக ஏற்பாடு செய்வதில் நிதி ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆக, அந்த இடத்தைப் பொறுத்த அளவிற்கு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இருந்தால் துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

ஓய்வுக் கூடம்

***4013—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மீன் வளம், நிதி, மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—